# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 56/2023

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் நாள் திங்கட்கிழமை PW-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW 5 Examined as PW 5

| | | |
|---|---|---|
| Date | : | 22.01.2024 |
| Name | : | யுவன்ராஜ் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A1.4.5..6 present. A3,A7 Accused absent. Petition filed and allowed.

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான்நல்லாந்துர் மேலபடுகையில் வசிக்கிறேன். நான் சென்டிரீங் வேலை செய்கிறேன். ஆஜர்எதிரிகளை தெரியும். அ.சா.1,2 யை தெரியும். 17 .02.2018 தேதி நான் வீட்டில் இருந்தபோது கொங்காநகரில் இருந்து ஒரு பையன் போன் செய்தார். என்அண்ணனை அடித்துவிட்டதாக சொன்னார்கள். சொன்னது யார் என்று கேட்டதற்கு ரவிச்சந்திரன் என்றுதான் சொன்னார். அங்கிருந்து கொங்காநகர்சென்றோம் அங்கிருந்து நல்லாடை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றாதாக சொன்னார்கள் நான்போய் பார்த்தேன். அங்கிருந்து பெத்தபெருமாளுக்கு தகவல்தெரிந்து அங்கு வந்திருந்தார். அங்கிருந்து கண்ணனுக்கு போன் செய்தார். அதற்கு கண்ணன் பதில் சொல்லாமல் மீண்டும மீண்டும் போன் செய்ததற்கு

நல்லாடையில்செங்கல்கால்வாய் இருப்பதாக சொன்னார்கள், நானும் பெத்தபெருமாளும் சென்றோம் அடிப்பட்ட காயத்துடன் கொட்டகையில் ஜான்சனை உட்கார வைத்திருந்தார்கள்,. பெத்தபெருமாள் என்னை அருகில் வந்தால் பிரச்சனை ஆகிவிடும் என்று என்னை அங்கே இருக்கச் சென்னார்கள், அதன்பிறகு இருசக்கர வாகணத்தில் உட்கார வைத்து காவல்நிலையம் அழைத்துசென்றோம். அங்கிருந்து மருத்துவமனை அழைத்துச்செல்லுங்கள் என்று சொன்னார்கள் நான் மயிலாடுதுறை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் அங்கும் சீரியசாக இருப்பதால் கும்பகோணம் அன்பு மருத்துவமனைக்குஅழைத்துச்சென்றோம் போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**